உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# கிறிஸ்தவ ஞானஸ்நானம்

பாடம் - 53




## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் : # 53

## கிறிஸ்தவ ஞானஸ்நானம்

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

வேதாகம சத்தியங்களைக் குறித்த நம்முடைய ஒருவருட ஆராய்ச்சி முடிவுக்கு வந்திருக்கையில்.... நாம் தேவ கிருபையினால் **“அந்தகாரத்திலிருந்து”** (அறியாமை) **விடுவிக்கப்பட்டு.... “அவருடைய ஆச்சரியமான ஒளிக்குள்ளாக” (1 பேதுரு 2 : 9)** அழைத்துவரப்பட்டிருப்பதை உணரலாம்.



ஆம்,
வேதவசனங்களிலிருந்து
**தெளிவாகவும், ஆழமாகவும்**
**....தேவனுடைய மாபெரும்**
**தெய்வீக திட்டத்தையும் -**

**....விசேஷமாக "பெரிதான இரட்சிப்பையும்"**

நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். இதை இந்த சுவிசேஷ யுகத்தில் தம்முடைய குமாரனாகிய, இயேசுவினுடைய சீஷர்களாகிய – கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளித்திருக்கிறார்.

**எனவே, இன்று நாம் நம்முடைய கடைசி பாடமாக.... தேவனுடைய வார்த்தைகளில் காணப்படுகிற.... கிறிஸ்தவ ஞானஸ்நானம் குறித்து காண்போம்.**



**ஆம், தேவனுடைய வார்த்தைகளில் ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் வாசிப்பது என்ன ?**

பின்வரும் வசனத்தின் மூலம் நாம் துவங்குவோம்.

**எபேசியர் 4 : 5**

**"ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்....."**

ஆம், கிறிஸ்துவின் **"ஒரே சரீரத்திற்கு".....”ஒரே ஞானஸ்நானம்"** இருக்கிறது.

**இங்கு "ஒரே ஞானஸ்நானம்" என்பது எதைக் குறிக்கிறது ?**

நாம் ஏற்கனவே பார்த்த **பாடம் 17, 18** மற்றும் **19**-களில் இயேசு கிறிஸ்துவின் சபை என்பது....

**"ஜீவனுள்ள தேவனுடைய" ஒரே சபையாக** இருப்பதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம்.

## 1 தீமோத்தேயு 3 : 15

**"...தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன், அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது."**

மேலும், இந்த மகிமையான சபை மூன்று நிலைகளில் உருவாக்கப்படுவதை பின்வரும் வசனம் விவரிக்கிறது

## வெளிப்படுத்தல் 17 : 14

**“இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள், ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார், அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்.”**

இந்த வசனம் சபையானது, தொடர்ந்து வருகிற மூன்று படிகளிலான வளர்ச்சி நிலையை கடப்பதின் மூலம் தெரிந்தெடுக்கப்படுவதை விவரிக்கிறது.

....மேலும், அது அப்படியிருப்பதை நாம் ஆராய்ந்து அறிந்தோம்.

கிறிஸ்தவ வளர்ச்சியில் முதலாம் நிலை என்பது



.....**இயேசுவின்** மீது விசுவாசம் வைத்து அவருடைய **“விசுவாசிகளாக” மாறுவதே** என்பதை நாம் கண்டோம்.

மேலும், விசுவாசிகள் என்ற நிலையில் “அநேகர்” இருப்பதை பின்வரும் வசனத்தின் மூலம் அறிந்தோம்.

## மத்தேயு 22 : 14

**“அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்.....”**





ஆம், “விசுவாசிகளாவதற்கு” அழைக்கப்பட்டவர்கள் அநேகராயிருக்கின்றனர்.

ஆனாலும், இயேசுவின் “விசுவாசிகளாகிய” இந்த **“அழைக்கப்பட்ட”** நிலையிலிருந்து..... **“தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக”** மாறுகிறவர்கள் **“சிலர்”** என்று கண்டோம்.



**இந்த “தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்” யாரைக் குறிக்கிறார்கள் ?**

இவர்கள் வசனத்தில் வாசிக்கிறபடி இயேசுவை “விசுவாசிப்பது” என்பதன் ஆழமான பொருளையும், நோக்கத்தையும் புரிந்துகொண்டவர்கள் ஆவர்.

**பிலிப்பியர் 1 : 29**

**“ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.”**

ஆம்- **“...அவர் நிமித்தமாகப் பாடுபட....”** வேண்டும்.

**எப்படியென்று நீங்கள் கேட்கலாம் ?**



அது **"அவருடைய அடிச்சுவட்டை"** பின்பற்றி .....அவரை பின்பற்றுகிறவர்களாக மாறுவதின் மூலமாக.

உண்மையில், இதுவே... ஒரு கிறிஸ்தவனாக இருக்க **"அழைக்கப்பட்டதின்"** நோக்கமாகும்.

இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம்.


**1 பேதுரு 2 : 21**

**"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்."**

இங்கு, அவருடைய அடிச்சுவடை "பின்பற்ற" நினைக்கிறவர்களுக்கு எழும் கேள்வி என்னவெனில்,

**இயேசுவின் அடிச்சுவடுகள் என்றால் என்ன ? – என்பதே.**

இதற்கான விடையை பின்வருமாறு எளிமையாக கூறலாம்





அவருடைய "அடிச்சுவடு" என்பது **"யோர்தானில்"** துவங்கி **"கல்வாரியில்"** **முடிவடைந்தது.**

இன்று நாம்.... யோர்தான் நதியில் துவங்கிய அவருடைய முதல் அடியை குறித்து ஆராய இருக்கிறோம்.

**ஆம், அது...இயேசுவினுடைய ஞானஸ்நானம் ஆகும்.**

இது வேதவசனங்களில் பதிவாகியிருப்பதை நாம் வாசிக்கிறோம்.



**மத்தேயு 3 : 13**

**“அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார்.”**

இங்கு இயேசுவின் ஞானஸ்நானத்தில் நாம் கவனிக்க வேண்டிய காரியம் ஒன்று இருப்பதை காண்கிறோம்.

ஆம், அது தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வந்த இயேசுவை யோவான் ஸ்நானகன் தடை பண்ணுவதாக நாம் வாசிப்பதாகும்.

**மத்தேயு 3 : 14**

**“யோவான் அவருக்குத் தடைசெய்து - நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்.”**



ஆம், இயேசுவிற்கு "ஞானஸ்நானம் கொடுக்க" தான் முற்றிலும் தகுதியற்றவன் என்று யோவான் ஸ்நானகன் நினைத்ததை காண்கிறோம்.

......இதனால், அவர் அந்த வார்த்தைகளை இயேசுவிடம் வெளிப்படுத்தினார்.
அதற்கு பதிலாக இயேசு அவரிடம் கூறியது என்ன ?

அந்த பதிலைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**மத்தேயு 3 : 15**

**"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக - இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்."**

**இயேசுவினுடைய இந்த வார்த்தைகள் எதைக் குறிக்கிறது ?**

இங்கு, இயேசு குறிப்பிட்டது யோவான் உணர்ந்துகொள்ள முடியாத ஒன்றாகும். ஆம், அவருடைய சரீரமாகிய.....சபைக்கு தான் தலையாக இருக்கப்போவதை இயேசு அறிந்திருந்தார்.

**மேலும், அந்த சபைக்கு "...முன் மாதிரியை..." விட்டுச் செல்லுவது அவருடைய கடமையாகும்.**

அதின் மூலம் அவருடைய சரீரமாகிய சபை அவருடைய அடிச்சுவடுகளில் அவரை பின்பற்றிச் செல்ல முடியும் என்பதை வசனத்தில் வாசிக்கிறோம்.

**1 பேதுரு 2 : 21**

**- "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்."**

ஆம், கர்த்தருடைய இந்த **"முன் மாதிரி" ...அவருடைய ஞானஸ்நானத்தில்.... துவங்கியது.**

**இங்கு, இயேசுவின் ஞானஸ்நானத்தில் உள்ளதும்...**

**நாம் அறிந்துகொள்ள வேண்டியதுமான முக்கியத்துவம் என்ன ?**

**மேலும், அவர் ஞானஸ்நானம் பெற்றபோது ஏதேனும் வார்த்தைகளை கூறினாரா ?**

இவைகளைக் குறித்து நான்கு சுவிசேஷங்களிலும் ஏதும் சொல்லப்படவில்லை. மேலோட்டமாக, இயேசு ஒரு வார்த்தையும் கூறவில்லை.



ஆனால், அவருடைய இருதயத்தின் நினைவுகள் பின்வரும் வசனத்தில் வெளிப்படுவதை காண்கிறோம்.

**எபிரெயர் 10 : 7**

**"அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்."**

பார்த்தீர்களா.... அவர் ஞானஸ்நானத்தில் முழுகின போது... இயேசுவினுடைய இருதயத்தில் இருந்த வார்த்தைகள் இதுவேயாகும். ஆம், அவருடைய முழுகுதல்... தேவனுடைய சித்தத்திற்குள்ளாக அவர் முழுகியதை அடையாளப்படுத்துகிறது.

ஏனென்றால், **தன்னுடைய சுயசித்தத்தை வெறுத்து...** அது முதல் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவர் ஒப்புக்கொடுத்தார்.

இவ்விதமாக, தேவனுடைய சித்தம் செய்ய அவர் ஏற்படுத்தின **இந்த ஒப்பந்தத்தை இயேசு யோர்தான் நதியில் "முழுக்கப்பட்டதின் மூலம்" அடையாளப்படுத்தினார்.** இதனாலேயே ஞானஸ்நானம் என்ற வார்த்தை

## "பாப்டைஸோ" — "Baptiso"

என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்படுகிறது. **இதற்கு முழுகுதல் என்று பொருளாகும்.**

**இதுவே, தேவனோடு இயேசு ஏற்படுத்தின உடன்படிக்கைக்கு அல்லது ஒப்பந்தத்திற்கு அடையாளமாகும்.**



இந்த "அடையாளத்திற்கும்" மேலான அதேசமயம் உண்மையான "ஞானஸ்நானம்" அல்லது "முழுகுதல்" என்பது.....யோர்தான் நதியில் துவங்கி... அவருடைய மரணம் வரையிலான ஜீவ காலத்தை உள்ளடக்கிய நடைமுறை வாழ்க்கையில் நிறைவேறியது.

ஆம், இதைக் குறித்து இயேசுவினுடைய வார்த்தைகளில் தெளிவாக வாசிக்கிறோம்.

**லூக்கா 12 : 50**

**"ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்..."**

**...பார்த்தீர்களா ?**

ஆம், மரணபரியந்தம் **தேவனுடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதில்....** அவர் **"முழுகவேண்டியது"** அவசியமாக இருந்ததை இயேசுவின் வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது.

**....மேலும் தம்மை பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவரும் இந்த "ஞானஸ்நானத்தை" பெற்றுக்கொள்ள தற்போது இயேசு அழைக்கிறார்.**

ஆம், பின்வரும் வசனத்தில் இதைக் குறித்து தெளிவாக வாசிக்கிறோம்

**மத்தேயு 16 : 24**

**"அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்."**

**ஆம், இங்கு தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளதை காண்கிறோம்.**

இயேசு தாம் முதன் முதலில் செய்ததை இப்பொழுது அவரை பின்பற்றுகிற அனைவரும் செய்யும்படி அழைக்கிறார்.



இதை மிக தெளிவாக பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**மாற்கு 10 : 38**

**"இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும்**

**பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும் நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்."**

ஆம், அதே காரியத்தை இங்கு காண்கிறோம்.

பரலோக பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு... அவர்களுடைய சுயசித்தத்தை வெறுப்பதாகும்.

**இதுவே எபேசியர் 4:5-ல் சொல்லப்பட்டுள்ள ஒரே "ஞானஸ்நானமாகும்".**

**இதுவே "முழுகுதல்" அல்லது "பாப்டைஸோ" (baptiso) ஆகும்.**

**இதுவே... "சில" கிறிஸ்தவர்கள் தற்போது புரிந்துகொள்ளவும், உணரவும் சிலாக்கியம் பெற்ற அந்த... "ஒப்பந்தம்" அல்லது "உடன்படிக்கையாகும்".**

ஆம், இந்த "இரகசியமான உடன்படிக்கையை" குறித்து நாம் வாசிக்கையில்,

**சங்கீதம் 25 : 14**

**"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது, அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்."**

**ஆம், இது ஒரு இரகசியமான உடன்படிக்கையாகும்.**

இதற்கான பதிலை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்.

**சங்கீதம் 50 : 5**

**"...பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்."**

ஆம், இது ஒரு... **"பலியினாலான உடன்படிக்கையாகும்".**

**இது பரலோக பிதாவின் சித்தத்தை செய்வதற்காக....ஒருவருடைய**



**சுயசித்தத்தை – அதாவது மனித சித்தத்தை பலி செலுத்துவதாகும்.**

ஆம், இந்த “பலியே” அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிற பலியாகும்.

**ரோமர் 12 : 1**

**“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.”**

**இது ஒரு “கட்டாயமோ... அல்லது திணிக்கப்படுவதாகவோ இல்லாமல்... மாறாக, இது ஒரு அழைப்பாகவும்... வேண்டுகோளாகவும் இருக்கிறது.**

இங்கு – **“...இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்...”** என்ற வார்த்தைகளை கவனிக்கவும்.

ஆம், இங்கு வெறும் விசுவாசிகளாக இருந்த **“சகோதரர்களை”... அப்போஸ்தலனாகிய பவுல் ...தாமாக முன்வந்து** முக்கியமான முடிவு எடுக்கவும் -


...கிறிஸ்தவ வாழ்க்கையில் அடுத்த அடியை எடுத்து வைக்கவும் ஊக்குவிக்கிறார். ஆம், அது இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றுவதாகும்.

இங்கு “ஜீவபலியாக” என்று சொல்வதின் மூலம் அப்போஸ்தலன் கூற விரும்புவது என்ன ?

இதற்கான விடை அந்த வசனத்திற்குள்ளாகவே இருப்பதை காண்கிறோம்.

**அது "உங்களுடைய சரீரங்களை" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகும்.**

ஆம், இங்கு அதனுடைய **உரிமைகள், சிலாக்கியங்கள்** மற்றும் **கனவுகள்** ஆகியவற்றை **உள்ளடக்கிய மாம்சீக வாழ்க்கையை** அல்லது மனித வாழ்வை குறிக்கிறது. இது தேவனுடைய சித்தத்தை செய்யவதற்காக ஏறெடுக்கப்படும் சுயசித்தத்தை வெறுப்பதுடன் கூடிய...பலியாக தேவனுக்கு செலுத்தப்படுகிறது.



**இது மரணபரியந்தம் கர்த்தர் நிறைவேற்றிய விதத்திலும், அதே ஆவியிலும் ஏறெடுக்கப்படுகிறது.**

இவ்விதமாக, இதற்கு பின்பே.....ஒரு கிறிஸ்தவன் இயேசுவின் "மரணத்திற்குள்" பிரவேசிப்பதை நாம் வாசிக்கிறோம்.



**ரோமர் 6 : 3**

**"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா ?"**

ஆம், இது சுயசித்தமும், மாம்சீக வாழ்க்கை மற்றும் அதன் விருப்பங்களும் பலிசெலுத்தப்படுகிற....மரணமாகும்.

இது பின்வரும் வசனத்திலும் விவரிக்கப்பட்டுள்ளதை காண்கிறோம்.

**கொலோசெயர் 3 : 3** - **"ஏனென்றால், -**

**நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.”**

ஆம், இங்கு ஜீவபலி என்பது.... **“மரித்திருந்து”** அதேசமயம் உண்மையில் உயிரோடு **“ஜீவித்து”** இருப்பதையும் குறிக்கிறது.

**ஆம், இது பிதாவினுடைய சித்தத்தை செய்வதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட (அல்லது முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட) வாழ்க்கையைக் குறிக்கிறது.**

மேலும், இது ஒன்றே இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கான வழி.... என்பதை இயேசு உறுதிப்படுத்துகிறார்.

**மத்தேயு 7 : 21**

**“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.”**

ஆம், இது எளியதும், தெளிவானதுமாக தோன்றுகிறது.

கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்த “விசுவாசியாக” ...மாத்திரம் இருப்பது பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கும், “பரலோக பரிசை” பெறுவதற்கும் போதுமானது அல்ல, மாறாக அதற்கு மேலும், ஒரு படிசெல்லவேண்டும்...

**ஆம்...பிதாவினுடைய சித்தம் செய்வதாகும்.**

இங்கு, “கர்த்தாவே, கர்த்தாவே” என்று இருமுறை குறிப்பிடப்பட்டிருப்பது பெயர் கிறிஸ்தவத்தின் இரண்டு பாகங்களாகிய

**ரோமன் கத்தோலிக்கம்**... மற்றும்
....**புரோட்டஸ்டன்ட்** அமைப்புகளை குறிக்கும்.

இவ்விதமாக, ஒரு **ரோமன் கத்தோலிக்கனாகவோ** அல்லது ஒரு **புரோட்டஸ்ட்டன்டாகவோ** இருந்து இயேசுவின் மீது விசுவாசம் வைப்பது மாத்திரம் “பரலோக பரிசை” பெற்றுக்கொள்ள போதுமானது அல்ல... மாறாக, அதற்கு பிதாவினுடைய சித்தத்தை செய்வது அவசியம் என்பதை இந்த வசனம் தெளிவுப்படுத்துகிறது.

## இப்படியிருக்க, பிதாவினுடைய சித்தம் என்பது என்ன ?

இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம்.

**ரோமர் 8 : 29**

**“தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தனது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.”**



ஆம், தற்போது **“தமது குமாரனுடைய சாயலுக்கு”** ஒப்பாக – அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் “சாயலாக” மாறுவதற்கு முன்வருகிறவர்களையே பிதா எதிர்பார்க்கிறவராகவும், அழைக்கிறவராகவும் இருக்கிறார்.

மேலும், இது “அவருடைய அடிச்சுவடுகளில்” **...மரணபரியந்தம் ...சுயத்தை பலிகொடுத்து ....பின்பற்றுவதின் மூலம்** மாத்திரமே முடியும்.

இவ்விதமாக, இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றுவதற்காக சுயத்தை வெறுக்கும் இந்த முடிவு ....மிக முக்கியமானதும், பரலோக

பிதாவோடு செய்கிற **"உடன்படிக்கை"** அல்லது **...ஒப்பந்தம்** என்றும் குறிப்பிடப்பட்டு,

**"பாப்டைஸோ"**

என்ற கிரேக்க வார்த்தைக் குறிக்கிற "தண்ணீர்" முழுக்கினால் மிக அருமையாக அடையாளப்படுத்தப்படுகிறது.



மேலும், இதை ஆங்கிலத்தில் **BAPTISM** என்றும் தமிழில் **"ஞானஸ்நானம்"** என்றும் அழைக்கப்படுகிறது.

**இதுவே எபேசியர் 4 : 5-ல் சொல்லப்பட்டுள்ள "ஒரே ஞானஸ்நானம்" ஆகும்.**

இங்கு பொதுவாக கேட்கப்படுகிற ஒரு கேள்வியை நாம் கவனிக்கவேண்டும். அது-

**இதற்கு முன்...பல சபைகளில் ஏற்கனவே எடுக்கப்பட்ட "ஒன்று" அல்லது "அநேக" ஞானஸ்நானங்கள் எதைக் குறிக்கிறது ? அல்லது...**

**...நான் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்கவேண்டுமா ?**

இதற்கான விடை எளிமையாக இருக்கிறது.

இன்று வேதத்தின் இந்த சத்தியமாகிய – **“ஒரே ஞானஸ்நானம்”** மற்றும் **“ஒரே சரீரம்”** மற்றும் **“உங்களுக்கு உண்டான அழைப்பினாலே ஒரே நம்பிக்கை” (எபேசியர் 4 : 4)** என்பது... முற்றிலும் காணாமல் போன நிலைமையில் ஒருவர் அப்படிப்பட்ட அறியாமை நிலைமையில் அந்த **“....ஒரே ஞானஸ்நானம்....”** எடுத்ததாக கூறமுடியாது.

அது மாத்திரமல்ல கர்த்தரோடு **(சங்கீதம் 25 : 14) செய்கிற “இரகசியமான உடன்படிக்கையை”** பற்றின அறிவு....பொதுவாக காணப்படுவதில்லை. இது தவிர இன்றைய சபைகளில் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்து சில உதாரணங்களை நாம் காண்போம்.

## ரோமன் கத்தோலிக்க சபைகள்



ரோமன் கத்தோலிக்கர் மத்தியில் “ஞானஸ்நானம்” என்பது..... சபையின் அங்கத்தினர் ஆவதற்கான...வழிமுறையாக கருதப்படுகிறது.

அது தன்னுடைய செயல்களை பற்றின அறிவும் அது எதைக் குறிக்கிறது என்று அறியாத குழந்தைகளுக்கு கொடுக்கப்படுகிறது. மேலும், “ஞானஸ்நானம்” என்பது தண்ணீர் தெளிப்பதின் மூலம் கொடுக்கப்படுகிறது மாறாக, தண்ணீரில் முழுகுவதின் மூலம் அல்ல.

## புரோட்டஸ்ட்டன்ட் சபைகள்

புரோட்டஸ்ட்டன்ட் பிரிவினர் மத்தியில் ஞானஸ்நானம் என்பது சபையின் அங்கத்தினர் ஆவதற்கான வழிமுறையாக மாத்திரம்

கருதப்படாமல்.... அதற்கு மேலும் ஒரு படிசென்று



பாவங்களுக்கான மன்னிப்பை பெறும் வழிமுறையாக கருதப்படுகிறது.

சில சபைகளில் உதாரணமாக பெந்தெகொஸ்தே சபைகளில் "ஞானஸ்நானம்" என்பது ....இயேசுவிடம் ஜீவனை அர்ப்பணிப்பதாக உணரப்படுகிறது.

சில புரோட்டஸ்ட்டன்ட் சபைகளில் குழந்தைகளுக்கு தண்ணீர் தெளிப்பின் மூலம் "ஞானஸ்நானம்" கொடுக்கப்பட்டாலும் (உதாரணம் **CSI & CNI)** ....பெரும்பான்மையான புரோட்டஸ்டன்ட் சபைகளில் "ஞானஸ்நானம்" வயது வந்தவர்களுக்கு "தண்ணீர் முழுக்கின்" மூலமே கொடுக்கப்படுகிறது.



**இருந்தபோதிலும், பெயர் சபையின் இவ்விரு பிரிவுகளிலும்....**
**இந்த "இரகசியமான உடன்படிக்கையை" பற்றின அறிவும்....**

**அதை பற்றின சத்தியமும்....**

**அதை பற்றின புரிந்துகொள்ளுதலும் இல்லாமல் இருப்பதை கவனிக்கவேண்டும்.**

**இது ஏன் ?**

ஏனென்றால், அந்திக்கிறிஸ்து அமைப்பு தோன்றின நாள் முதல் – **"மூன்று படி மாவில்"** சேர்க்கப்பட்ட **"புளித்தமாவினால் (மத்தேயு 13:33)** ....இந்த விலையேறபெற்ற சத்தியங்கள் காணப்படாமல் போயின.

**....ஆகையால், ஞானஸ்நானத்தை "மறுபடியும்" எடுப்பது முக்கியமல்ல....மாறாக, அந்த "ஒரே உண்மையான" ஞானஸ்நானத்தை....முதல் முறையாக எடுப்பதே முக்கியமாகும்.**

இங்கு பொதுவாக கேட்கப்படுகிற மற்றொரு கேள்வியை காணலாம்.

**...அந்த "ஞானஸ்நானத்தை" நாம் எடுக்கமுடியுமா ?**

**....மேலும், அதை இயேசு நிறைவேற்றியது போல் என்னால் நிறைவேற்ற முடியுமா ?**

ஆம், இது அநேக சகோதர சகோதரிகளுடைய இருதயத்தில் விதைக்கப்படும் "சந்தேகத்தின் விதையாக" இருக்கிறது.

**இது சாத்தானால் விதைக்கப்படுகிறது.**



ஆனால், இந்த சந்தேகத்திற்கான விடையை கர்த்தராகிய இயேசு கொடுத்திருப்பதை காண்கிறோம்.

**மாற்கு 10 : 39**

**"அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்."**

**.....பார்த்தீர்களா ?**

ஆம், தம்முடைய அடிச்சுவடுகளை பின்பற்ற முடிவெடுக்கிற சபையின் அங்கத்தினராகிய ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் கர்த்தர் அளிக்கும் உறுதிமொழியாக இது இருக்கிறது.

**இதை நீங்கள்....நம்புகிறீர்களா ?**

**ஆம், நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா...அல்லது சாத்தானை நம்புகிறீர்களா ?**

இறுதியாக....கிறிஸ்தவர்களின் **"ஒரே ஞானஸ்நானத்தையும்"**

.....அந்த **"இரகசியமான உடன்படிக்கையையும்"** பற்றின சத்தியத்தை அறிந்து

....அதை **"அவருடைய கிருபையின் மூலம்"**

....நிறைவேற்ற முடியும் என்ற கர்த்தருடைய உறுதிமொழியையும் அறிந்த பிறகு

**....இந்த எண்ணம் கடைசியாக தோன்றுவதை காண்கிறோம்**



**நான் ஒரு பாவி... முதலில் என்னுடைய பாவம் நிறைந்த வார்த்தைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் கிரியைகளிலிருந்து என்னை நானே சுத்திகரித்து.... பின்பு இந்த "பலியினாலான உடன்படிக்கையை" செய்கிறேன்.**



ஆம், அதை இப்பொழுது செய்ய நான் தகுதியானவன் அல்ல. ஏனென்றால், நாம் அனைவரும் பாவிகளே.

ஆனால், இதைக் குறித்து பரலோக பிதா என்ன சொல்கிறார் என்பதை அவருடைய வார்த்தைகளில் வாசிக்கலாம்.

**யாத்திராகமம் 20 : 26**


**"என் பலிபீடத்தின்மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்..."**

பார்த்தீர்களா... இதுவே கர்த்தருடைய பதிலாக இருக்கிறது.

இது ஒரு விசித்திரமான பதிலாகும்.

**இது எதைக் குறிக்கிறது ?**

இது **"சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து"** பார்க்கையில் இது அடையாள பாஷையில் இருப்பதை உணருகிறோம்.



இதன் பொருளை இப்பொழுது புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

**"என் பலிபீடத்தின் மேல்"**

இது இந்த சுவிசேஷ யுகத்தில் ஒருவர் தன்னை **"விசேஷித்த பலியாக" (எபிரெயர் 9 : 23)** தேவனிடத்தில் அர்ப்பணிப்பதற்கான மாபெரும் சிலாக்கியத்தை குறிக்கிறது.

ஆம், இது ஒப்புக்கொடுப்பதற்கான மாபெரும் சிலாக்கியமாகும்.

**"படிகளால் அதின்மேல் ஏறவும்"**

இது அந்த "பலிபீடத்தை" குறிக்க பேசப்படுவதாகும். எனவே இது ஒப்புக்கொடுப்பதை குறிக்க வேண்டும்.

இது ஒருவர் தன்னுடைய பாவ நிலையிலிருந்து முன்னேற்றம் அடைவதை... அல்லது நீதியை நோக்கி ஏறெடுக்கப்படும் **தனிப்பட்ட முயற்சிகளாகிய... "ஏறுவதை"** குறிக்கிறது.

**இம்மாதிரியான முயற்சிகள் வெற்றி பெறுமா ?**

இதைக் குறித்து கர்த்தருடைய வார்த்தையை நாம் வாசிக்கலாம்.

**"உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு"**


ஆம், சகோதர, சகோதரிகளே, இந்த சத்தியத்திற்குள்ளாக நம்மை அழைத்த கணபொழுதிலிருந்து...

நம்முடைய பாவநிலை கர்த்தரால் அறியப்பட்டதாகவே இருக்கிறது.

இதை பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம்.

**எபிரெயர் 4 : 13**

**"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்."**




ஆம், "அழைக்கப்பட்ட" அனைவருடைய விழுந்து போன மற்றும் பாவ நிலையும்......அவர்கள் அனைவரின் மாம்சீக மற்றும் மனநிலையில் காணப்படுகிற பெலவீனங்களை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

அவர் ஒருவருடைய இருதயத்தின் நினைவுகள் மற்றும் வார்த்தைகளை மற்றும் கிரியைகள் அனைத்தையும் அறிந்திருக்கிறார்.

.....மேலும், அவரால் மாத்திரமே அந்த பாவங்களை மூடவும் அவைகளை ....இயேசுவினுடைய இரத்தத்தின் விலை கிரையத்தின் மீது வைக்கப்படும்

விசுவாசத்தின் மூலம் பெறப்படுகிற நீதி மற்றும் **"சத்திய வார்த்தைகளினால்" (யோவான் 17 : 17)** உண்டாகும் **பரிசுத்தமாக்குதலின்** மூலம் குணமாக்கவும் முடியும்.

ஆம், தேவன் நம்முடைய இருதயங்களை **.....அது உண்மையும், விசுவாசமும், பரிசுத்தமுமாக இருக்கிறதா** என்பதை மட்டுமே பார்க்கிறார்.

**மேலும், இந்த "இருதயத்தையே" அல்லது "சித்தத்தையே" ஒருவருடைய "ஒப்புக்கொடுத்தலின் போது" அல்லது "ஞானஸ்நானத்தின்போது தேவன் உண்மையில் எதிர்பார்க்கிறார்.**

இவ்விதமாக, இன்று உங்கள் ஒவ்வொருவரிடமும் நமது பரலோக பிதா அவருடைய வார்த்தைகளின் மூலம் பேசுகிற சத்தத்திற்கு இறுதியாக, நாம் செவி சாய்த்து கவனிப்போம்.

**நீதிமொழிகள் 23 : 26**

**"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா, உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக...."**

ஆம், கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு.... இந்த சத்தத்தை இயேசு கேட்டபொழுது, அதற்கு அவருடைய பதில் பின்வருமாறு இருந்ததை வாசிக்கிறோம்.



**சங்கீதம் 40 : 8**

**"என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்."**

அதுவே இயேசுவின் பதிலாக இருந்தது.


**உங்களால் இன்று இந்த வார்த்தைகளை.... பரலோக பிதாவின் சத்தத்தை "கேட்க முடிகிறதா" ?**

**ஆம், அதற்கு இன்று உங்களுடைய பதில் என்ன ?**

**இன்று...அவரிடத்தில் நீங்கள் பதில் அளிக்கையில் கர்த்தர் தாமே தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு உங்களை பெலப்படுத்துவாராக.**

**...ஆமென்...**

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST E-mail: thekingdom1_6@yahoo.com